பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 07 2024 **MONDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ரஷ்யா, ஆஸ்திரியா நாடுகளுக்கு மூன்று நாள் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை மாஸ்கோ சென்றடைந்தார்.

2. கடந்த பத்தாண்டுகளில் நாட்டின் வளர்ச்சிக்காக பல திட்டங்களை தேசிய ஜனநாயக கூட்டணி அரசு செயல்படுத்தியுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. ஜார்கண்ட் மாநிலத்தில் திரு ஹேமந்த் சோரன் தலைமையிலான அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற்றுள்ளது.

4. அமர்நாத் யாத்திரை பாதையில் தங்கு தடையின்றி செல்போன் சேவை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

5. மும்பையில் கனமழையால் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

--இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>>

ரஷ்யா, ஆஸ்திரிய நாடுகளுக்கு மூன்று நாள் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை ரஷ்ய தலைநகர் மாஸ்கோ சென்றடைந்தார்.

விமான நிலையத்தில் ரஷ்யாவின் துணை பிரதமர் திரு டெனிஸ் **Manturov** அவரை வரவேற்றார்.

அணிவகுப்பு மரியாதையும் அவருக்கு அளிக்கப்பட்டது.

நாளை நடைபெறும் 22-ஆவது இந்திய – ரஷ்ய ஆண்டு உச்சிமாநாட்டில் ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புட்டினுடன் கலந்துகொள்ளும் பிரதமர் திரு நரேந்திர மோடி, பல்வேறு இருதரப்பு விஷயங்கள் குறித்தும் பேச்சு நடத்தவுள்ளார்.

பாதுகாப்பு, வர்த்தக தொடர்புகள், முதலீடு, எரிசக்தி ஒத்துழைப்பு, கல்வி, கலாச்சாரம், இருநாட்டு மக்களுக்கு இடையிலான தொடர்புகள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விஷயங்கள் இந்த உச்சிமாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளன.

உலகளாவிய மற்றும் மண்டல அளவிலான பல்வேறு முக்கிய விஷயங்கள் குறித்தும் இரு தலைவர்களும் பேசவுள்ளனர்.

பிரிக்ஸ் நாடுகள் கூட்டமைப்பு, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு, ஜி-20 நாடுகள், கிழக்காசிய நாடுகள் கூட்டமைப்பு மற்றும் ஐ நா விவகாரங்கள் குறித்தும் இதில் விவாதிக்கப்படவுள்ளது.

இன்று மாலை பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு, ரஷ்ய அதிபர் சிறப்பு விருந்து ஒன்றை அளிக்கிறார்.

நாளை ரஷ்யாவில் உள்ள இந்திய வம்சாவளியினரை சந்திக்கவுள்ள பிரதமர், மாஸ்கோவில் **‘Kremilin ’** நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தவுள்ளார்.

இரு தலைவர்களும் தனிப்பட்ட முறையிலும், தூதுக்குழுவினருடனும் பல்வேறு கட்டங்களில் பேச்சு நடத்தவுள்ளனர்.

ரஷ்ய பயணத்தை முடித்துக்கொண்டு நாளை ஆஸ்திரியா செல்லும் பிரதமர் மோடி, அந்நாட்டு சான்சலர் திரு **Karl Nehammer-**ஐ சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

உள்கட்டமைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, உயர் தொழில்நுட்பம், புத்தாக்க தொழில்கள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குறித்து ஆஸ்திரியாவுடன் பிரதமர் மோடி பேச்சு நடத்தவுள்ளார்.

**<<<<<<>>>>>>**

இளநிலை நீட் தேர்வு வினாத்தாள் வெளியானது தொடர்பாக புதன்கிழமைக்குள் அறிக்கை தாக்கல் செய்யுமாறு மத்திய அரசு மற்றும் தேசிய தேர்வு முகமைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இளநிலை நீட் தேர்வு முறைகேடு தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை இன்று விசாரணைக்கு எடுத்துக்கொண்ட தலைமை நீதிபதி திரு சந்திரசூட், மற்றும் நீதிபதிகள் திரு பர்திவாலா, திரு மனோஜ் மிஸ்ரா ஆகியோர் கொண்ட அமர்வு, நீட் முறைகேடு புகார்கள் தொடர்பாக நடத்தப்பட்ட புலன் விசாரணையின் தற்போதைய நிலை குறித்த அறிக்கையை தாக்கல் செய்யுமாறு சிபிஐ-க்கும் உத்தரவிட்டுள்ளது.

நீட் தேர்வு முறைகேடுகள் தொடர்பாகவும், இவ்வாண்டு நடத்தப்பட்ட நீட் தேர்வை ரத்து செய்யக்கோரியும் தாக்கல் செய்யப்பட்ட 38 மனுக்கள் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

மனுதாரர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், இவ்வாண்டு இளநிலை நீட் தேர்வை ரத்து செய்துவிட்டு, மறு தேர்வு நடத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

தலைமை நீதிபதி திரு சந்திரசூட், இந்த தேர்வில் முறைகேடுகள் நடந்திருப்பது சந்தேகத்திற்கு இடமின்றி தெரியவருவதாகவும் அவர் கூறினார்.

கேள்வித்தாள் முன்கூட்டியே வெளியானது உள்ளிட்ட முறைகேடுகளால் இந்த தேர்வு எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்பதை முழுமையாக ஆய்வு செய்த பின்னரே, இதுகுறித்து முடிவெடுக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

<<<<<<>>>>>>

ஜார்கண்ட் மாநிலத்தில் திரு ஹேமந்த் சோரன் தலைமையிலான அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற்றுள்ளது.

ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா தலைமையிலான கூட்டணி அரசு மீது நம்பிக்கைக்கோரும் தீர்மானம் இன்று அம்மாநில சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

அம்மாநில சட்டப்பேரவையில் பெரும்பான்மை பெறுவதற்கு 39 உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்ற நிலையில், திரு ஹேமந்த் சோரன் அரசு, 45 வாக்குகளை பெற்றுள்ளது.

இதனையடுத்து, முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரன் தலைமையிலான அமைச்சரவையில் இன்று 11 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்டனர்.

இதில், ஆறு உறுப்பினர்கள் ஜார்கண்ட் முக்தி மோர்ச்சாவை சேர்ந்தவர்கள்.

காங்கிரஸ் கட்சியிலிருந்து நான்கு பேரும், ராஷ்ட்ரிய ஜனதாதள் கட்சியிலிருந்து ஒருவரும் அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்டனர்.

இந்த அமைச்சரவையில் முன்னாள் முதலமைச்சர் திரு சம்பை சோரனும் இடம்பெறுள்ளார்.

<<<<<<>>>>>>

அமர்நாத் யாத்ரிகர்கள் தாங்கள் செல்லும் பாதை முழுவதும் தங்கு தடையின்றி செல்போன் சேவை பெறுவதற்கு ஏதுவாக தொலைத்தொடர்பு கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய தொலைத்தொடர்புத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களுடன் இணைந்து, அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழிப்பாதையில் 31 புதிய தொலைத்தொடர்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு, மொத்தம் 82 இடங்களில் செல்போன் இணைப்புக்கான சேவை விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்போன் வசதி கிடைப்பதற்காக அமர்நாத் யாத்திரை வழித்தடத்தில் சிம் கார்டுகளை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தொலைத்தொடர்புத்துறை கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

கடந்த பத்தாண்டுகளில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு நாட்டின் வளர்ச்சிக்காக பல திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

ஆந்திரப்பிரதேச மாநில பிஜேபி செயற்குழு கூட்டத்தில் உரையாற்றிய அவர், ஆந்திரப்பிரதேசத்திலும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மத்தியிலும் - மாநிலத்திலும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் செயல்பாட்டினால், மாநிலத்தின் வளர்ச்சி விரைவுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் பேசிய ஆந்திரப்பிரதேச பிஜேபி தலைவர் திருமதி புரந்தேஸ்வரி, தேசிய ஜனநாயக கூட்டணியின் கொள்கைகளை அங்கீகரிக்கும் வகையிலும், வளர்ச்சி பெற்ற இந்தியாவை உருவாக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையிலும் மக்களவைத் தேர்தல் வெற்றி கிடைத்திருப்பதாக கூறினார்.

<<<<<<>>>>>>

மும்பை மற்றும் புறநகர் பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே, பொதுமக்கள் கனமழையின்போது தேவையில்லாமல் வெளியில் வரவேண்டாம் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

முதலமைச்சர் தலைமையில் உயர்மட்டக்குழு நிலைமையை ஆய்வு செய்து வருகிறது.

அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாகவும் திரு ஏக்நாத் ஷிண்டே செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சாலை மற்றும் ரயில் போக்குவரத்து தொடங்கியுள்ள போதிலும் மும்பை நகரின் தாழ்வான பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

மும்பையிலிருந்து புறப்படும் 50-க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

<<<<<<>>>>>>

இம்மாதம் ஒன்றாம் தேதி முதல் மத்திய அரசின் மூன்று குற்றவியல் சட்டங்கள் நடைமுறைக்கு வந்துள்ளன.

மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப புதிய சட்டங்களை கொண்டுவர வேண்டியது அவசியமாகிறது என்று நாமக்கல்லை சேர்ந்த வழக்கறிஞர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் – வழக்கறிஞர் ஜெயபால் – 45 செகண்ட்ஸ்*

<<<<<<>>>>>>

பெண் ஊழியர்களுக்கு மாதவிடாய்கால விடுப்பு அளிப்பது குறித்து மாநிலங்கள் மற்றும் பல்வேறு தரப்பினரையும் கலந்தாலோசித்து மாதிரி கொள்கை ஒன்றை உருவாக்குமாறு மத்திய அரசுக்கு, உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தலைமை நீதிபதி திரு சந்திரசூட் தலைமையிலான அமர்வு இதுதொடர்பான பொதுநல மனு மீது ஆய்வு செய்து கொள்கை ஒன்றை உருவாக்குமாறு மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்துக்கு உத்தரவிட்டு, வழக்கை முடித்துவைத்தது.

<<<<<<>>>>>>

இலங்கை கடற்பகுதியில் வெளிநாட்டு அறிவியல் ஆய்வு கப்பல்களை நிறுத்துவதற்கு கடந்த ஆண்டு பிறப்பித்த உத்தரவை நிறுத்தி வைக்க இலங்கை அரசு முடிவு செய்திருப்பதாக ஊடகங்களில் வெளியான தகவல் தவறானது என்று அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் அளித்த பேட்டியில், தமது கருத்துக்கள் செய்தித்தாள்களில் தவறாக பிரசுரிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

எதிர்கால சூழ்நிலையை கருத்தில் கொண்டே இதுதொடர்பான முடிவுகளை அரசு எடுக்கும் என்றும், ஆனால் இதுவரை வெளிநாட்டு ஆய்வு கப்பல்களை அனுமதிக்கும் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் அடுத்த ஏழு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தொடர்ந்து மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மற்றும் வங்கக்கடல் பகுதிகளிலும், தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளிலும் 45 முதல் 55 கிலோமீட்டர் வேகம் வரை எட்டக்கூடிய சூறாவளி காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<END>>>>>>